ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2024 பெப்புருவரி 19 |


**நிதியியல் உளவறிதல் பிரிவினால் 2023 செத்தெம்பர் 27 தொடக்கம் திசெம்பர் 31 வரை நிதியியல் நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட நிருவாக ரீதியான தண்டப்பணங்கள்**

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 19(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்கள் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. நிதியியல் நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற்கொண்டு தண்டப்பணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2023 செத்தெம்பர் 27 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் கீழே காட்டப்பட்டவாறு, மொத்தமாக ரூ.14 மில்லியன் கொண்ட தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணங்களாக சேகரிக்கப்பட்ட தொகைத் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டன.

1. **எம்எம்பிஎல் மணி ட்ரான்ஸ்வெர் (பிறைவெட்) லிமிடெட்**

| | | |
|---|---|---|
| **விதிப்புத் திகதி** | : | **2023 நவெம்பர் 03** |
| **தொகை** | : | **ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)** |
| **கொடுப்பனவுத் திகதி** | : | **2023 நவெம்பர் 14** |

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

எம்எம்பில் மணி ட்ரான்ஸ்வெர் (பிறைவெட்) லிமிடெட் அதன் முகவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்தல் அத்துடன் அம்முகவர்கள் கம்பனியின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான கட்டமைப்பிற்கு இசைவாக செயற்படுகின்றனரா என்பதை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்கான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தாமையினால், கம்பனியானது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்)

விதிகளைக் கடைப்பிடிப்பதற்கு தவறியமைக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

**2. இலங்கை வங்கி**

| | | |
|---|---|---|
| **விதிப்புத் திகதி** | : | **2023 நவெம்பர் 07** |
| **தொகை** | : | **ரூ. 6,000,000.00 (ரூபா ஆறு மில்லியன்)** |
| **கொடுப்பனவுத் திகதி** | : | **2023 நவெம்பர் 21** |

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

பின்வருகின்றவாறு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் என்பவற்றின் தேவைப்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு தவறியமைக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது;

- பல்வேறுபட்ட அரசியல் ரீதியாக முகம்கொடுக்கின்ற ஆட்களுடன் வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்ளும்போது அதன் மூத்த முகாமைத்துவத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கி தவறியிருந்தது. மேலும், அரசியல் ரீதியாக முகம்கொடுக்கின்ற ஆட்களுடன் வியாபாரத்தொடர்புகளை மேற்கொள்ளும்போது மூத்த முகாமைத்துவத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் காணப்பட்டன.

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1373இற்கு இணங்க, 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7)ஆம் இலக்க ஒழுங்குவிதியின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட தனிப்பட்டவர்களை, 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் 5ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க தகுதிவாய்ந்த அதிகாரசபையினால் 1863/25ஆம் இலக்க 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளை ஆகியவற்றின் பிரகாரம், ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நடாத்துதல் அத்துடன் நிதியங்களை, நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார வளங்களை முடக்குதல் ஆகியவற்றை தாமதமின்றி தடுப்பதற்கு வங்கி தவறியிருந்தது.

- நிதியியல் உளவறிதல் பிரிவினால் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்ட 1ஆம் இலக்க FIU/UNSCR-1373/ பணிப்புரைகளின் தேவைப்பாடுக்கமைவாக, பெயர்குறிக்கப்பட்ட வாடிக்கையாளர்களினால் வைத்திருக்கப்படும் நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றின் முழுமையான விபரங்களையும் உடனடியாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தெரியப்படுத்துவதற்கு வங்கி தவறியிருந்தது.

3. **மக்கள் வங்கி**

| | | |
|---|---|---|
| **விதிப்புத் திகதி** | **:** | **2023 நவெம்பர் 09** |
| **தொகை** | **:** | **ரூ. 7,000,000.00 (ரூபா ஏழு மில்லியன்)** |
| **கொடுப்பனவுத் திகதி** | **:** | **2023 நவெம்பர் 22** |

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

பின்வருகின்றவாறு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் என்பவற்றின் தேவைப்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு வங்கி தவறியமைக்காக நிருவாகத்தண்டப்பணம் விதிக்கப்பட்டது ;

- வங்கியானது இடைநீக்கப்பட்ட கணக்குகளின் மூலமாக பற்று கொடுக்கல்வாங்கல்களை செய்துள்ளமையினால், நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட இடைநிறுத்தக் கட்டளைகள் மற்றும் அதைத்தொடர்ந்து நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15(3)ஆம் பிரிவின் கீழ் மேல் நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்ட கட்டளைகள் ஆகியவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியிருந்தது.

- பல்வேறுபட்ட அரசியல் ரீதியாக முகம்கொடுக்கின்ற ஆட்களுடன் வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்ளும்போது அதன் மூத்த முகாமைத்துவத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கி தவறியிருந்தது. மேலும், அரசியல் ரீதியாக முகம்கொடுக்கின்ற ஆட்களுடன் வியாபாரத்தொடர்புகளை மேற்கொள்ளும்போது மூத்த முகாமைத்துவத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் காணப்பட்டன.

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1373 இணங்க, 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7)ஆம் இலக்க ஒழுங்குவிதியின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட தனிப்பட்டவர்களை, 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் 5ஆம் ஒழுங்குவிதிக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரசபையினால் 1863/25ஆம் இலக்க 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளை ஆகியவற்றின் பிரகாரம், ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நடாத்துதல் அத்துடன் நிதியங்களை, நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார வளங்களை முடக்குதல் ஆகியவற்றை தாமதமின்றி தடுப்பதற்கு வங்கி தவறியிருந்தது.

- நிதியியல் உளவறிதல் பிரிவினால் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்ட 1ஆம் இலக்க FIU/UNSCR-1373/ பணிப்புரைகளின் தேவைப்பாடுகளுக்கமைவாக, பெயர்குறிக்கப்பட்ட வாடிக்கையாளர்களினால் வைத்திருக்கப்படும் நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றின் முழுமையான

விபரங்களையும் உடனடியாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தெரியப்படுத்துவதற்கு வங்கி தவறியிருந்தது.

- மேலும், பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பின்னரும்கூட, பெயர்குறிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மீது விதிக்கப்பட்ட முடக்கலைத் தளர்த்துவதற்கு வங்கி தவறியிருந்தது. இது, ஏற்கனவேயுள்ள பெயர்குறிக்கப்பட்ட பட்டியல்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ள போது வங்கி அதன் வாடிக்கையாளர் தரவுத்தளத்தை பரிசோதிக்கவில்லை என்பது தெளிவாகின்றது.